அரசிதழ் பதிவுபெற்ற உதவியாளர்களுக்கான செலவு

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) அமைச்சர்களுக்கு அரசிதழ் பதிவு பெற்ற (Gazetted) உதவியாளர்கள் வேலைக்கு நியமித்ததினால் இது வரை சம்பளம், அகவிலைப்படி ஆகியவைகளுக்கு எவ்வளவு செலவாகியிருக்கிறது ?

(இ) யார் யாருக்கு அரசிதழ் பதிவு பெற்ற உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : (அ) 30-9-1967 தேதிய நிலவரப்படி, ரூ. 31,566·67.

(இ)—(1) கல்வி-தொழில் அமைச்சர்.

(2) பொதுப்பணி அமைச்சர்.

(3) உணவு-வருவாய்த்துறை அமைச்சர்.

(4) அரிசனநல-செய்தித்துறை அமைச்சர்.

(5) சட்டம்-கூட்டுறவு அமைச்சர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, Gazetted P. A. (உதவியாளர்கள்) போடவேண்டிய காரணமென்ன ? அவர்களால் அதிகப்படியாக கிடைக்கக்கூடிய ஒத்தாசை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்களால் நல்ல ஒத்தாசை இருக்கிறது என்று கருதுகிற காரணத்தால்தான் அவர்கள் போடப்பட்டு இருக்கிறார்கள். அதனால் அதிகப்படியான செலவு ஒன்றும் ஆகிவிடவில்லை.

Barani Theatre

*160-E *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Kondalampatti Barani Theatre near Salem Town was recently set on fire by goondas ;

(*b*) whether the police had not taken any action in spite of the incident being reported to them ;

(*c*) if so, the details thereof ; and

(*d*) the loss incurred by the threatre ?

பரணி தியேட்டர்

திரு. என் ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் சேலம் நகரை அடுத்த கொண்டலாம்பட்டி பரணி தியேட்டரில், காலிகளால் தீ வைக்கப்பட்டதா ?

(இ) இது சம்பந்தமாக போலீசில் புகார் செய்தும் போலீசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையா ?

(உ) ஆம் எனில், காரணங்கள் யாவை ?

(எ) தியேட்டருக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

2nd March 1968]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : (அ) இல்லை.

(இ) தீவைப்புப்பற்றி எவ்வித புகாரும் போலீசில் பெறப்படவில்லை.

(உ) and (எ) கேள்விக்கு இடமில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note*—An asterisk * at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION *re* DISTURBANCES OUTSIDE THE ARUVANKADU CORDITE FACTORY AND SHOOTING NEAR THE POLICE STATION.

MR. CHAIRMAN : I have received notice of a motion under rule 43 of the Madras Legislative Council Rules given by Thiru R. Raman Nair for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the disturbances outside the Aruvankadu Cordite Factory on 1st March 1968 and the shooting near the Police Station. 4-00 p.m.

திரு. ஆர். ராமன் நாயர் : இது அவசரமான காரியம். அருவங்காடு பாக்டர்க்கு பக்கத்தில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டிருக்கிறது. போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இருந்த மக்களிடையே ஏற்பட்டு இருந்தாலும் கூட துப்பாக்கிப் பிரயோகம் விரிவு அடைந்திருந்தால் பல ஆயிரக்கணக்கான மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு இருக்கும். அதனால்தான் இது அவசரம் என்று சொல்லுகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : அருவங்காட்டில் நடந்ததால் இது அவசரமா ?

திரு. ஆர். ராமன் நாயர் : பாக்டரிக்குப் பக்கத்தில் நடந்திருப்பதால் இது அவசரம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அருவங்காடு வெடி மருந்துத் தொழிற்சாலையில் வேலை பார்க்கிற தொழிலாளர்கள் இருவர் முதல் தேதி காலையில் அங்கிருக்கின்ற போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரில் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேறு எந்த விதமான பிரச்னையும் அங்கு கிடையாது. கூலி உயர்வு பிரச்னை, வேறு கோரிக்கைகள் எதுவும் கிடையாது. அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை மத்திய சர்க்காருக்கு உட்பட்டது. போலீஸ் ஸ்டேஷன் கட்டிடமும் அந்தத் தொழிற்சாலைக்கு உட்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காருக்கு உட்பட்டிருக்கிறது. அங்கே இரண்டு தொழிலாளர்கள் சண்டை போட்டுக்கொண்ட நேரத்தில் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து சப் இன்ஸ்பெக்டர் அவர்களை வருமாறு அழைக்க அவர்கள் மறுத்து இருக்கிறார்கள். மறுத்தவுடன் போலீசாரை விட்டு அவர்களை அழைத்து வரச் செய்திருக்கிறார். அவர்கள் உள்ளே வந்ததும் அவர்களைக் கண்டித்து இருக்கிறார். நமக்கு வந்திருக்கிற தகவல்படி அந்தத் தொழிலாளர்களைப் போலீசார் அடித்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு ஒரு 200 தொழிலாளர்கள் போலீஸ் ஸ்டேஷனைச் சூழ்ந்துகொண்டு அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். அவர்களை ஜாமீனில் உடனடியாக விடுதலை செய்திருக்கிறார்கள். ஜாமீனில் வெளியேறிய பிறகு மறுபடியும் ஒரு மணி நேரத்திற்குப் பின்னால் ஒரு 500, 600 தொழிலாளர்கள் கூடிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனைச் சுற்றி வளைத்து சப் இன்ஸ்பெக்டரை சஸ்பெண்டு செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பெரிய அளவிற்கு ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். அந்த நேரத்தில் இன்ஸ்பெக்டரும் அங்கு வந்து 'நான் சஸ்பெண்டு செய்கிற கோரிக்கையை ஒத்துக்கொள்ளு